**Form.No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

Calender
Miscellaneous CC.No.98 of 2018
Priliminary Register
Sessions

Prosectuion PW6
Depostitions of Prosecution witness for Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | சதீஷ்குமார் |
| Husband /Father name | : | மதியழகன் |
| Village | : | வெண்ணங்குடி |
| Taluk | : | |
| Calling | : | PW6 (LW5 ) |
| Religion | : | |
| Age | : | 38 |

**1, 7** எதிரிகள் ஆஜர். **2** முதல் **5** எதிரிகள் ஆஜரில்லை. **6** வது எதிரி இறப்பு. **1** முதல் **5, 7** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர். பிரிவு **355** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. சாட்சி **காட்டுமன்னார்கோயில் காவல்நிலைய** பெண் தலைமை காவலர் திருமதி. ஆஷா **1268 WHC என்பவரால் அடையாளம் காட்டப்பட்டார்.**

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act
(Central Act 44 of 1969) on the 25th day of June 2026

**முதல் விசாரணை**

நான் வெண்ணங்குடியில் வசித்து மீன்சுருட்டி காய்கறி கடையில் மேனேஜராக

இருக்கிறேன். சாட்சி விஜயகாந்த் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. 31.12.2017 அன்று மாலை 5 மணியளவில் பழஞ்சநல்லூரில் உள்ள கவிதா என்பவரின் வயலில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது போலீசார் வந்து வரைபடம் வரைந்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னுடன் விஜயகாந்த் என்பவரும் கையொப்பம் செய்தார். நான் கையொப்பம் செய்த பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**1 முதல் 5, 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.காம் படித்துள்ளேன். காட்டுமன்னார்கோயில் காவல்நிலையத்திலிருந்து என்னை விசாரித்தபோது நான் அங்கு வேலை செய்து கொண்டிருந்தேனா என்றால் சரிதான். என்ன வேலை செய்துகொண்டிருந்தேன் என்றால் வரப்பு அண்டை கழித்துக் கொண்டிருந்தேன். மதியம் 3 மணிக்கு வேலைக்கு வந்தேன். 5 மணிக்கு போலீசார் வந்தனர். 5 மணிக்கு போலீசார் வந்து சென்ற பின்பு எவ்வளவு நேரம் வேலை பார்த்தேன் என்றால் அரைமணி நேரம் வேலை பார்த்தேன். போலீசார் விசாரணையில் நானும் எனது நண்பர் விஜயகாந்த் என்பவரும் காட்டுமன்னார்கோயில் போய்விட்டு திரும்ப ஊருக்கு இருசக்கர வாகனத்தில் வந்தபோது காட்டுமன்னார்கோயில் – பாப்பாகுடி செல்லும் மெயின்ரோட்டிற்கு தெற்காக உள்ள வயலில் போலீசார் நின்று கொண்டிருந்தனர் என்றும், நாங்கள் அங்கு சென்ற போது எங்களை அழைத்து விசாரித்தார்கள் என்று நான் கூறியதாக தெரிவித்திருந்தால் அது பொய் என்றால் நான் வேலை செய்துவிட்டு காட்டுமன்னார்கோயில் சென்றுவிட்டு வரும்போது போலீசார் அங்கு விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்று சொன்னேன்.

என்னுடைய முதல் விசாரணையில் நான் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது விசாரித்ததாக தெரிவித்திருந்தால் அது பொய் என்றால் சரியல்ல. வேலை பார்த்துவிட்டு காட்டுமன்னார்கோயில் போய்விட்டு வரும்போது விசாரித்ததாக தான் சொன்னேன். மேற்படி விபரத்தை எனது முதல்விசாரணையில் தெரிவிக்கவில்லை என்றால் 10 ஆண்டுகள் ஆனதால் நினைவில்லை. கேட்டதால் தெரிவிக்கிறேன். அ.சா.4 மதியழகன் எனது தந்தை. முருகப்பன் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் 20 ஆண்டு நட்பு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நான் வெளியில் இருந்தேன். சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். நான் அப்போதும் அதே நிலத்தில் தான் வேலை செய்தேன். என்னுடன்

அன்று விஜயகாந்த் என்பவரும் வேலை செய்தார். விஜயகாந்த் என்பவர் வீட்டிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் வேலை பார்த்தார். நான் எழுதிய தாளில் கையொப்பம் செய்தேனா அல்லது படம் வரைந்த தாளில் கையொப்பம் செய்தேனா என்றால் எழுதிய தாளில் தான் கையொப்பம் செய்தேன்.

எழுதிய தாளில் என்ன விபரம் எழுதியிருந்தது என்றால் கவிதா என்பவருக்கும் எதிரிகளுக்கும் சண்டை நடந்ததா என்று எழுதியிருந்தார்கள். அதில் தான் கையொப்பம் செய்தேன். என் முன்னிலையில் தான் வரைபடம் வரைந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தபோது அங்கு என்ன கலரில் பைப்பு இருந்தது என்றால் நினைவில்லை. வரைபடத்தில் எத்தனை பனைமரம் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் நினைவில்லை. வரைபடம் வரைந்தபோது எந்தெந்த சர்வே நம்பர்கள் குறிப்பிட்டனர் என்றால் தெரியாது. அந்த வரைபடத்தில் ரோட்டிற்கு தெற்கில் உள்ள வயல் மட்டும் தெரிந்தது. முருகப்பனுக்கும் 1வது எதிரிக்கும் மேற்படி நிலம் தொடர்பாக பிரச்சனை இருந்து நீதிமன்றத்தில் வழக்கு உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 கவிதாவும் முருகப்பனும் எனக்கு குடும்ப நண்பர்கள் என்றாலும் அவர்கள் கேட்டுக் கொண்டதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னை போலீசார் விசாரித்தபோது கையால் எழுதினார்களா அல்லது கணிணியில் தட்டச்சு செய்தார்களா என்றால் கையால் தான் எழுதினார்கள். என்னுடைய வாக்குமூலத்தை கணிணியில் தட்டச்சு செய்திருந்தால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.ஆ.3 ல் உள்ள சங்கதிகள் எதுவும் எனக்கு மறந்துவிட்டதாகவும், அதை பொறுத்து வரைபடமும் என்ன இருந்தது என்று தெரியாததால் என்னை விசாரித்த தேதியும், நேரமும் குறிப்பிட்டு சொல்வது அ.சா.1, அ.சா.2 எனக்கு தேதியை நினைவூட்டி நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அனுப்பியுள்ளனர் என்றால் சரியல்ல. நான் மேற்படி கையொப்பத்தை காவல்நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பு மறுவிசாரணை**

என்னிடம் காட்டப்படும் வரைபடம் தான் என் முன்னிலையில் தயார் செய்யப்பட்ட வரைபடம் ஆகும். அது அ.சா.ஆ.4 ஆகும்.

**மறு விசாரணைக்கு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஏற்கெனவே சாலைக்கு தெற்காக உள்ள வயல் மட்டும் தான் எனக்கு தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அரசுதரப்பில் மாதிரி வரைபடத்தை காண்பித்து கேட்ட கேள்விக்கு மட்டும் ஆம் என்று பதில் சொல்லியுள்ளேன் என்றாலும் மற்ற விபரங்கள் எனக்கு தெரியும் என்றாலும் சரியல்ல.

சாட்சி விசாரணை முடிந்தது. மறு விசாரணை இல்லை.

Signature of witness